# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 117 இதழ் : 4 29–3–1991 (மார்ச். 29— ஏப்ரல். 12) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


### 10 ஆண்டு நிறைவு

தெற்காசிய சமயச் செய்திகளைத் தாங்கி வரும் "சார் செய்திகள்" தனது 10 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளது. இதையொட்டி இச்செய்தி இதழை விரிவுபடுத்தி "தெற்காசிய பிராந்தியச் செய்திகள்" என ஆக்குவதற்கு நிர்வாகத்தினர் தீர்மானித்துள்ளனர்.

### ஓய்வுபெறும் 28, 604 அரச ஊழியர்களில் ஆசிரியர்கள் 11, 529 பேர்

# ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதனால் கல்வியின் தராதரம் குறைந்துவிடும்

**கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி அதிபர் அருள்திரு ஸ்டான்லி அபேசேகர கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரையாற்றுகையில், பெருந்தொகையான ஆசிரியர்கள் ஓய்வுபெறுவதால் மாணவர்களின் கல்வியில் ஏற்படவுள்ள தாக்கத்தைச் சுட்டிக்காட்டினார்.**

அரசாங்கம் அளித்த சலுகைகளைப் பயன்படுத்தி பெருந்தொகையான ஆசிரியர்கள் ஓய்வுபெறுவதால் இலங்கையில் கல்வியின் தரம் குறைந்துவிடும் என கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி அதிபர் பிதா ஸ்டான்லி அபேசேகர கல்லூரி பரிசளிப்பு விழாவின் போது கூறினார்.

அரசாங்கத்தின் திட்டப்படி உரிய காலத்திற்கு முன் ஓய்வுபெறும் 28, 604 அரசஊழியர்களுள் 11, 529 பேர் ஆசிரியர்களாவர். இத்தகைய அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் திடீரென விலகுவதால்ஏற்கெனவே கல்வி வசதிகள் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கும் கல்விநிலை மேலும் வீழ்ச்சியடைய நேரும், என அவர் மேலும் கூறினார்.

இப் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக இருந்த ஜனாதிபதி பிரேமதாச இக் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத் தக்கது. தமது கல்லூரி வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி சகல இன மாணவரிடையிலும் ஒரு காலத்தில் இருந்து வந்த நட்புறவு இன்று மறைந்துவிட்டதையிட்டு கவலை தெரிவித்தார்.

## மன். ஆயர் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

மன்னார் மறைவட்ட ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகை மார்ச் 16ஆந் திகதி நண்பகல் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் தகாத வார்த்தைகளால் நிந்திக்கப்பட்டதையும் தாக்கப்பட்டதையும் கண்டித்து யாழ் மறைவட்ட குருக்கள், ஆயர், பொதுநிலையினர் கழக உறுப்பினர்கள் பல மகஜர்களை அனுப்பி உள்ளனர்.

பாஸ்கா திருவிழிப்புக்காக ஆயர் தமது காரில் கொண்டு வந்த பாஸ்கா மெழுகு வர்த்தியைக் கண்ட வவுனியா சர்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## விசுவாசத்தை வலுப்படுத்த திருவழிபாட்டை புனரமைத்தல்

வட இந்தியாவிலுள்ள 35 மறைமாவட்டங்களைச் சேர்ந்த திருச்சபைத் தலைவர்கள் ஜனவரி22- 23 ஆம் திகதிகளில் பாட்னாவில் கூடிய பொழுது திருவழிபாட்டை, முக்கியமாக ஞாயிறு திருப்பலியை பண்பாட்டு மயமாக்குவதினாலும், பொதுநிலையினர் பங்களிப்பினாலும் புனரமைக்க வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தனர். திருவழிபாடு குருக்களினது மதச்சடங்காக மட்டும் ஆகிவிடாத படிக்கு பொதுநிலையினருக்குப் பயிற்சியளித்து அவர்களை ஆலயப்பணிகளில் பங்கேற்க வைக்க வேண்டுமென்றும், பிரதேச மொழியாகிய ஹிந்தியில் பூசைச் செபங்களை அமைப்பதுடன் இந்திய கலாச்சாரத்துக்கேற்ற வர்ணங்களிலும், வடிவங்களிலும் திருவுடைகள் தயாரிக்கப்படவேண்டுமென்றும் சிபாரிசு செய்யப்பட்டது.

பெரும்பாலான கத்தோலிக்கர் பூர்வகுடிகளாகையால் அவர்களது பிரதேசத்தில் அவர்களது கலாச்சாரத்துக்

(தொடர்ச்சி 4 ஆம் பக்கத்)

## ஜப்பானிலுள்ள அமெரிக்க தளங்களை உபயோகிப்பதற்கு கத். எதிர்ப்பு

ஜப்பானிலுள்ள அமெரிக்க தளங்களை வளைகுடாப் போரில் பங்கு பற்றும் துருப்புகள் பயன்படுத்துவதை எதிர்த்து கத்தோலிக்க நீதி சமாதானத்துக்கான சங்கமும் பல்வேறு பிரசைகள் குழுக்களும் டோக்கியோ வை. எம். சி. ஏ. மண்டபத்தில் ஒரு பேரணியை நடத்தினர். வளைகுடாப் பிரதேசத்தில் இராணுவ, பொருளாதார, அரசியல் ரீதியில் வல்லரசுகள் தலையிடுவதை வன்மையாகக் கண்டித்தனர். அத்துடன் ஜப்பானியரைத் தமது வாழ்க்கை முறையை மாற்றி, எண்ணெயில் தங்கியிராத ஒரு முறையைப் பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.

பெப்ரவரி 24 ஆம் திகதி அமெரிக்க தூதராலயத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்ய

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## இறைவார்த்தையை கொண்ட கத்தோலிக்க வாழ்வு

(யூக்கன் செய்தி)

"இந்தோனேசிய கத்தோலிக்கரின் ஆன்மீக வாழ்வுக்கு ஊற்றாக இருப்பது நற்கருணை மட்டுமல்ல. ஏனெனில் அதை நிறைவேற்றும் சந்தர்ப்பங்கள் அரிதாகவே இருக்கின்றன. ஆகவே அவர்கள் இறைவார்த்தையிலிருந்து ஆன்மீக ஊட்டத்தையும், வலிமையையும் பெற்றுக்கொள்ளுகின்றனர்" இவ்வாறு சமரின்டா மறைமாவட்ட ஆயர் மைக்கல் கூமான்ஸ் கூறியுள்ளார்.

மறைக்கல்வி ஆணைக் குழுவின் கூட்டத்தில் பேசிய அவர் தமது மறைமாவட்டத்திலுள்ள கத்தோலிக்கரிற் பெரும்பாலா

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## கிறிஸ்தவ சமூகங்கள் திருச்சபையோடு ஒன்றித்திருக்க வேண்டும்

(யூக்கன் செய்தி)

தாய்வான் தலைநகரான தாய்ப்பேயில் கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் பற்றி நிகழ்ந்த கருத்தரங்கொன்றிற்கு ஹொங்கொங்கிலிருந்துவருகை தந்திருந்த பிதா லூக் சூயி கம்யூ கிறிஸ்தவவாழ்வுச் சமூகங்கள் திருச்சபையோடு ஒன்றித்ததாகவும், அடிமட்ட மக்களுடன் தொடர்புடையதாகவும் இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

ஹொங்கொங் கத்தோலிக்க சமய சமூக நிறுவனத்தின் இயக்குநரான பிதா லூக் சூயி கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள் விசுவாசத்தையும், வாழ்வையும் இணைக்கும் ஒரு மறைக் கல்வியாகும் எனக் குறிப்பிட்டார்.

"கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம் ஒரு தனிக் குழுமம் அன்று. அது ஏனைய கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்களுடனும், பங்குடனும் மறைமாவட்டத்துடனும் அனைத்துலக திருச்சபையுடனும் இணைந்ததாகும். அது கடந்த காலத்தில் உறுதியாக வேரூன்றியதாய், நிகழ்கால நிலைமையை நன்குணர்ந்ததாய், எதிர்காலத்தின் மட்டில் தீர்க்க நோக்குடையதாய் இருக்க வேண்டும். திருச்சபையின் அடிமட்ட அமைப்பான இது அடிமட்ட மக்களாகிய ஏழைகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும்" என மேலும் அவர் கூறினார்.

## இந்தியாவில் இலங்கை அகதிகள் நிலை

(யூக்கன் செய்தி)

இலங்கையிலிருந்து புகலிடம் தேடி இந்தியா வந்துள்ள அகதிகளின் நிலை அகதி முகாம்களில் மோசமாய் உள்ளதாக இராமேஸ்வரத்திலுள்ள 80 அகதிமுகாம்களின் இணைப்பாளரான பிதா சின்னப்பன் அமல்ராஜ் கூறியுள்ளார். டிசம்பர் நடுப்பகுதியில் சுமார் இரண்டுலட்சம் இலங்கையர் இந்தியாவுக்கு அகதிகளாக வந்திருந்தனர். இவர்கள் படகுக்கு அதிக பணம் கொடுத்து நெருக்குப்பட்டு வந்தவர்கள் முன்பு

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

### கல்வியின் தரம்

இலங்கையின் வரண்ட பிரதேசத்தைத் தம் தாயகமாகக் கொண்டவர்கள் தமிழர்கள் கடின உழைப்பின் மூலம் தங்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்லவேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் வாழ்ந்த காரணத்தால் அதிக பிரயாசைக்குப் பெயர்பெற்றவர்களாக விளங்கினர். இத்தகைய மக்களுக்கு பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் கல்வி வாய்ப்பும், வேலை வாய்ப்பும் அதிகம் கிடைத்தபொழுது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கல்வியில் முன்னேறித் தொழில் வாய்ப்புக்களையும் அதிகம் பெற்று செல்வாக்குள்ள மக்களாக வாழ முடிந்தது.

இலங்கையின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்களில் பெரும்பான்மையானவர்கள் கல்வியில் அதிக நாட்டம் செலுத்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. 90 வீதமானவர்கள் கல்வியில் அக்கறையற்றவர்களாக வாழ்ந்தனர். இதனால் வாழ்க்கைத் தரம் முன்னேற சந்தர்ப்பம் அரிதாக இருந்தது.

ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியிலே விழிப்புணர்ச்சி அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இப்போது 90 வீசமானவர்கள் உயர் கல்வி கற்கக்கூடிய அளவுக்கு வசதி வாய்ப்புக்களும், சேவைகளும், சந்தர்ப்பங்களும் பெருகியுள்ளதால் அனைவரும் கல்வியின் தரத்தில் முன்னேறி வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

தமிழ் மக்களின் தாயகமாகிய வடக்குக் கிழக்குப் பகுதியில் நீண்டகால யுத்தத்தின் காரணமாக கல்வி சீர்குலைந்துள்ளமை அனைவரும் அறிந்ததே. இதன் தாக்கமானது எதிர்கால சந்ததியை எவ்வளவோ பாதிக்கிறது என்பதை எண்ணி வருந்தாதார் இலர்.

தற்போதைய சூழ்நிலைகளின் மத்தியிலும் எமது மாணவர்கள் கல்வியில் காட்டும் அக்கறை பாராட்டுதற்குரியதே. மாணவர்களின் கல்விக்கு இடையூறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள பல பொறுப்புள்ளவர்கள் அக்கறைகாட்டுவதும் பெருமைப்பட வேண்டியதே.

இருந்தும் காலப்போக்கில் இலங்கை மக்களின் கல்வி நிலை மாற்றத்தைக் கணிக்க முற்படுகையில் ஒருகால் கல்வியறிவில் முன்னின்ற தமிழ் மக்கள் மத்தியில் பல விழுக்காடு, தேய்வு ஏற்பட்டுள்ள தன்மையும், பெரும்பான்மை இன மக்களிடையே எதிர் மாறான மாற்றம் ஏற்பட்டுள்ள தன்மையும் நம் சிந்தனைக்கு விருந்தாக வேண்டும்.

கடந்த ஒரு தசாப்பத்தில் தமிழ் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. போதிய பாதுகாப்பு இன்மையால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் கல்வி சீர்கெட்டுள்ளது. மாணவர்கள் கல்வியில் அக்கறையற்றவர்களாக வாழுகின்றனர். சிரமப்பட்டு கல்வி கற்பதைவிடுத்து வீணே பொழுதைக் கழிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

கல்வி அறிவில் முன்னேற நம்மக்கள் தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தவும், பொறுப்புகளில் உள்ளவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவும் முயலவேண்டும்.

தமிழ் மக்கள் கல்வியில் சிறந்தவர்கள் என்ற பெயரையும் புகழையும் தொடர்ந்தும் நிலைநாட்ட வேண்டும். மாறாக பழைய பெருமைகளை மட்டும் பேசி காலத்தை வீணாக்கி எதிர்கால சந்ததியை அழிவின் பாதைக்கு இட்டுச் செல்லும் இழிநிலைமை மாறவேண்டும். வருங்கால சந்ததி தங்கள் கல்வியின் சீர்கேட்டை எண்ணி வருந்தாது வாழ, பொறுப்புகளில் உள்ள அனைவரும் பொறுப்புணர்ச்சியுடன் நடக்க வேண்டுகிறோம்.

# புதிய மறையாசிரியருக்கான பயிற்சிக் கருத்தரங்கு

''நீங்கள் உலகமெங்கும் சென்று அனைவரையும் சீடராக்குங்கள் ... கண்டவற்றையும், கேட்டவற்றையும் உய்த்துணர்ந்தவற்றையும் அனைவருக்கும் அறிவியுங்கள்''

கிறிஸ்து தாம் உயிர்த்துப் பரலோகம் செல்லுமுன் தம் பணியைத் தொடர்ந்து நடத்துமாறு சீஷர்கள் மூலம் இக்கட்டளையை விடுத்தார். அக்கட்டளையை சிரமேற்கொண்ட திருச்சபையும் தலைமுறை தலைமுறையாக குருத்துவப்பணியை மேற்கொண்டோர் மூலமாய் மட்டுமன்றி இல்லறத்தோர் பொதுநிலையினர் மூலமாகவும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

பேராயர் மறைமாவட்டத்தில், தமிழ் மக்களிடையே சேவை புரியவென இவ்வருடம் தங்களைக் கையளித்த புதிய மறையாசிரியர்கள் 36 பேர். மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழும் 8 வட்டாரங்களில், 6 வட்டாரங்களின் பிரதிநிதிகளாய் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒரு சிலர் தவிர்ந்த ஏனையோர் சில மாதங்கள் மட்டுமே மறையாசிரிய உலகில் அடியெடுத்து வைத்தவர்கள். எனினும் கருத்தரங்கு இடம்பெற்ற 5 நாட்களும் இவர்கள் தங்கள் திறமைகளை விளங்க வைத்தனர்.

மாசித்திங்கள் 27 ஆந் திகதி முதல் பங்குனி 3 ஆந் திகதி வரை இக்கருத்தரங்கு வென்னாப்புவாவின் திருக்குடும்பக் கன்னியர் ஞானொடுக்க இல்லத்தில் இடம் பெற்றது.

இந்நாட்களில் ''மறையாசிரியன் வாழ்வில் வேதாகமம் வகிக்கும் இடம்'', ''வேதாகமத்தின் வரலாறும் அதன் அமைப்பும்'' போன்ற விடயங்கள் யாழ். இம்மனுவேல் யேசுதாசன் அ.ம.தி. அடிகளால் அறிவுறுத்தப்பட்டது. உரைகளின் செயல்வடிவமாக குழு முயற்சிகள் இடம் பெற்றமை பாடத்திற்கு மேலும் பயனூட்டியது. இன்னும் மறைக்கல்வி வரலாறு, இன்றைய உலகில் மறையாசிரியன், மறையாசிரியரின் ஆன்மீகம் என்பன பற்றி அருட்செல்வி பெனடிக்ரா தி. சி. விளக்கினார். பாடத்தின் சிறப்பம்சமாக விளக்கப்படங்கள் தயாரிக்கப்பட்டு காட்சிக்கெனத் தொங்கின. கடைசி நாளில் அவை மதிப்பீடு செய்யப்பட்டு, அவற்றுள் சிறந்தவற்றிற்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

அருட்சாதனங்கள், அவற்றின் பலன், அவற்றை வாழும் முறை என்பன பற்றிய சிறப்பான உரைகளும், வீடியோ நிழற்படக்காட்சிகளாக யேசுவின் திருமுழுக்கு, திருப்பாடுகள் போன்ற படங்களும் நுவரெலியா மறைக்கல்வி இயக்குநர் நேரியோ ஆபிரகாம் அடிகளாரால் காட்டப்பட்டன.

மறைக்கல்வியை மாணவருக்கு அளிக்கக்கூடிய பல்வேறு வழிகள், முறைகள் பற்றி விளக்கி மாதிரிப்பாடமுறைகளால் அறிவை உறுதிப்படுத்தினார் திருமதி. மரியரட்ணம். விவாதப் போட்டிகளும் இடம் பெற்றன.

நான்காம் நாளிரவில் நாடகம், நடனம், பாடல், அபிநயம் போன்றவற்றால் தம் கலை ஆர்வத்தையும் எடுத்தியம்பினர். ஐந்தாம் நாள் மீளாய்வுகள் நடத்தப்பட்டன. அத்தாட்சிப்பத்திரங்கள், போட்டிகளுக்கான திறமைகட்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

அருட்செல்வி
பெனெடிக்ரா தி. சி.
பேராயர் மாவட்ட
தமிழ்ப்பிரிவு இயக்குநர்.

# பிறப்பு விகிதம் அதிகரிக்க முயற்சி

(யூக்கன் செய்தி)

ஜப்பானில் பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் சில நடவடிக்கைகளை ஆலோசித்து வருகிறது.

இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு வரிச்சலுகை அளிப்பது, பிரசவகால விடுமுறையை அதிகரிப்பது போன்ற சலுகைகளை அது கொண்டு வரக்கூடும்.

இப்போது சராசரியாக ஒரு குடும்பத்தில் 1.57 குழந்தைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த விகிதத்தில் பிறப்பு வீழ்ச்சியடைந்தால் 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜப்பானின் சனத்தொகை குறைய ஆரம்பிக்கும். இதனால் நாட்டின் பொருளாதாரமும் பாதிப்படையும்.

1937 இல் சீனா- ஜப்பானியப் போரின்போது பலுகிப் பெருக வேண்டுமென்பதே அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தது.

ஆனால் இன்று அரசாங்கத்தின் கொள்கைக்காகவோ, நாட்டின் நலனுக்காகவோ குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள ஜப்பானியப் பெண்கள் தயாராக இல்லை. பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது காரணம் குழந்தை பெறும் பருவத்தினரான 25—29 வயதுப் பெண்கள் தொகை 3.9 மில்லியனாகக் குறைந்துள்ளது. ஆண்களும் பெண்களும் வயது பிந்தி விவாகம் செய்து கொள்வது மற்றொரு காரணமாகும்.

கல்விக்கு ஆகும் செலவு, நகர்ப்புறங்களில் வசிப்பதற்கு போதிய இடவசதியின்மை ஆகியவையும் குடும்பங்கள் அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள விரும்பாமைக்கு ஓர் காரணமாகும்.

## பெண்கள் குழந்தைகளுக்கான அபிவிருத்தித் திட்டம்

இந்தியாவின் பெண்கள், குழந்தைகள் நலத்திணைக்களம் பல்வேறு சேவைகளை ஒருங்கிணைத்து வைத்திய உதவி வேலை வாய்ப்பு, கல்வி வசதி, குழந்தைப்பருவ குறைபாடுகளைக் கண்டுபிடித்தல் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான திட்டத்தை வகுத்துள்ளது.

1990ஆம் ஆண்டை பெண் குழந்தைகளின் ஆண்டாக வெற்றிகரமாக நடத்திய இத்திணைக்களம் பருவமடைந்த பெண்களுக்கு போஷாக்கு சுகாதாரக் கல்வி, திறன்களை வளர்த்தல் ஆகியவற்றை அளித்து அவர்களைத் தாய்மை நிலைக்கு ஆயத்தம் செய்யும் ஓர் திட்டத்தை ஆரம்பிக்க எண்ணியுள்ளது. ஏறக்குறைய 5·5 மில்லியன் பெண் குழந்தைகள் நாடு முழுவதிலும் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

அதே சமயத்தில் நாட்டில் குழந்தைகள் தாய்மார் நலனுக்காக 2424க்கு மேற்பட்ட திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர தனியார் நிறுவனங்களினால் 4300க்கு மேற்பட்ட நிலையங்கள் நடத்தப்படுகின்றன.

## இராணுவ அனுமதி

கத்தோலிக்க திருச்சபையின் சமூக- பொருளாதார நிலையம் வெளியிட்டுள்ள தவக்காலக் கல்வித்திட்டம் என்னும் வெளியீடு, சுவரொட்டிகள் ஆகியவற்றை வட இலங்கைக்கு அனுப்புவதற்கு

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறை நூலை நாம் ஏன் வாசிக்க வேண்டும்?

**அதன் செய்தி உண்மையாகவும் எக்காலத்திற்கும் உரியதாகவும் உள்ளது.**

மனிதன் எவனும் புல்லைப் போன்றவன். அவன் மகிமை அனைத்தும் புல்வெளிப் பூவைப் போன்றது. புல் உலர்ந்துபோம். பூ உதிர்ந்து போம். ஆனால் ஆண்டவரின் சொல் என்றென்றும் நிலைக்கும். இச்சொல்லே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி.

1 இரா. 1 : 24 – 25

**அது ஆண்டவரின் அருள்வாக்கு**

மறைநூலில் உள்ளதெல்லாம் கடவுளால் ஏவப்பட்டுள்ளது. போதிக்கவும், கண்டிக்கவும், சீர்திருத்தவும் இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வில் மக்களைப் பயிற்றவும் பயன்படும்.

2 தீமோ. 3 : 16 – 17

இறைவாக்கு ஒரு போதும் மனிதரின் விருப்பத்தால் உண்டானதில்லை. மனிதர் பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்டு கடவுளின் ஏவுதலால் பேசினர்.

2 இரா. 1 : 21

அது முடிவில்லா வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

குழந்தைப் பருவ முதலே உமக்கு மறைநூல் தெரியும் என்பதை நீர் மறவாதீர். மறைநூல் கிறிஸ்து யேசுவின் மேலுள்ள விசுவாசத்தினால் மீட்புக்கு அழைத்துச் செல்லக் கூடிய ஞானத்தை அளிக்கவல்லது.

2 தீமோ. 3 : 15

அதில் பின்வருவனவற்றைக் காண்கிறோம்.

**பாவமன்னிப்பு**

அவரைக் குறித்தே இறைவாக்கினர் அனைவரும் சாட்சியம் பகர்கின்றனர். அவரை விசுவசிக்கும் அனைவரும் அவருடைய பெயரால் பாவ மன்னிப்புப் பெறுவர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

அப். பணி 10, 43

**கடவுளின் அன்பு**

தம் ஒரே பேறான மகனின் வழியாக நாம் வாழ்வு பெறும் பொருட்டு, கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்.

இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது.

நாம் கடவுளுக்கு அன்பு செய்ததில் அன்று, அவரே நமக்கு அன்பு செய்து, நம் பாவங்களுக்குப் பரிகாரமாகத் தம் மகனை அனுப்பியதில் தான் அன்பின் தன்மை விளங்குகின்றது.

1 அரு. 4 – 9 – 10

**தூய்மை**

இளைஞன் தான் செல்லும் வழியில் புனிதனாய் எங்ஙனம் நடக்க இயலும். உம் வார்த்தையைக் கடைப்பிடித்தால்தான்.

சங். 118 : 9

நான் நடக்க வேண்டிய பாதையைக் காட்டும் விளக்கு உம் வார்த்தை. செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே.

சங். 113 – 105

உம் வார்த்தைகளைக் கண்டடைந்தேன். அவற்றை உண்டேன். உம் வார்த்தைகள் எனக்கு மகிழ்ச்சியாயின. என் உள்ளத்திற்கு இன்பம் தந்தன.

எரேமியா. 15 – 16

**அமைதி**

உமது சட்டத்தை நேசிப்பவர்களுக்கு மிகுதியான அமைதியுண்டு அவர்களை விழுத்தாட்டக் கூடிய தடைகள் இல்லை.

—சங். 118 : 165

**நிச்சயமான ஒரு நம்பிக்கை**

கடவுளுடைய மகனின் பெயர் மீது விசுவாசம் வைத்துள்ள உங்களுக்கு முடிவில்லா வாழ்வு உண்டு என்பதை நீங்கள் அறியவே இதையெல்லாம் எழுதினேன்.

1 அரு. 5 : 13

# பொதுநிலையினரை உருவாக்க ஐந்து மில்லியன் டொலர் நிதி

யூக்கன் செய்தி

ஹொங்கொங் திருச்சபையின் 150 ஆவது ஆண்டு நிறைவு ஞாபகார்த்தமாக பொதுநிலையினர் உருவாக்கத்தில் ஈடுபடும் தனிநபர்களுக்கும், குழுக்களுக்கும் உதவுமுகமாக அம் மறைமாவட்டம் ஐந்து மில்லியன் ஹொங்கொங் டொலர்களைத் திரட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது.

கருதினால் வூ செங் சுங் இதற்கென ஒரு நிதி அமைத்து, விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு செயற்குழுவையும் நியமிப்பார் எனத் தெரிய வருகிறது.

வால்ட்டர் மா கிங் வா என்பவர் ஜனவரி 13 ஆம் திகதி ஒரு நடைபவனியை நடத்துவதன் மூலமும், அதிர்ஷ்டலாபச் சீட்டுகள் முதல் நாள் உறைகள் முதலியவற்றை விற்பதன் மூலமும் குறித்த இலக்கை அடைய முடியும் எனக் கருதுகிறார். திரட்டப்படும் நிதியிலிருந்து உள்ளூரிலும், வெளிநாட்டிலும் இறையியல், திருச்சபையியல் போன்ற துறைகளில் கல்வி பெறுவதற்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். உள்நாட்டில் விசேட கருத்தரங்குகளை நடத்துவதற்கு நிபுணர்களை வருவிக்கவும், பங்குகளில் பொதுநிலைத் தலைவர்களைப் பயிற்றுவிக்கவும், தலத்திருச்சபை பற்றிய ஆய்வுகளை நடத்தவும் இந்நிதி பயன்படும்.

யூபிலி விழா அமைப்புக் குழுத் தலைவராக பிதா. லோக் 1997 இல் ஹொங்கொங் சீனாவுக்கு கைமாறும் போது, இந்த உருவாக்கமானது கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதற்கு அவர்களுக்குத் துணை புரியும் என்றும் விரைவிலேயே இரண்டாவது உருவாக்க நடுநிலையம் அமைக்கப்படவுள்ளது என்றும் கூறினார்.

# ஊழலை ஒழிக்க புதுமையான முயற்சி

மகாராஷ்டி, மாநிலத்தில் பேர் பெற்ற கிராமச் சீரமைப்பாளரான திரு அனா சாகேப் ஹசாரே, ஊழலை ஒழிப்பதற்கு ஒரு புதுமையான வழியைக் கையாண்டிருக்கிறார். அரச சேவையில் குறிப்பாக வனபரிபாலன, சூழல் பொறியியல் துறைகளில் காணப்படும் ஊழல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனக்குக் கிடைத்த ''இந்திரா பிரியதர்ஷனி விருஷமித்ரா'' விருதை அவர் திருப்பி அனுப்பியுள்ளார்.

கடந்த இரு ஆண்டுகளில் அவர் பல பெரும் ஊழல்களை வெளிப்படுத்தியுள்ளார். தமது துணையாளர்களுடன் அவர் இந்த ஊழல்களைக் கண்டுபிடித்ததோடு, அபிவிருத்தித் திட்டங்களில் 50 வீதமே செயற்படுவதையும், சமூக வன பரிபாலனத் துறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 இலட்சம் அல்லது 25 இலட்சம் ரூபா மோசடி செய்யப்படுவதையும் கண்டுபிடித்துள்ளார்.

இந்த ஊழல்களைக் குறித்து நடவடிக்கை எடுக்காவிட்டால் தமது பத்மஹீ, கிருஷிபூஷன் விருதுகளையும் திருப்பப் போவதாக மாநில அரசுக்கு ஜனவரி 5ஆம் திகதி வரைகாலக்கெடு அளித்துள்ளார்.

ஊழல்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யுமாறு அவர் கிராமிய மக்களைத் தூண்டி வருகிறார்.

# மெய்யியல் கருத்துகளுக்குப் புதிய விளக்கம்

(சார் செய்தி)

டிசம்பர் 27ஆம் திகதி மதுரையில் நடைபெற்ற மெய்யியல் மாநாடொன்றில் உரையாற்றிய ஆயர் பவுலோஸ் மார் கிறகோறியோஸ் வகுப்புவாதத்திலும், உலகாயதத்திலுமிருந்து உலகைக் காப்பாற்றுவது இந்திய தத்துவத்தின் வேலையாகும் என்று குறிப்பிட்டார்.

இந்தியாவின் மூன்றுபெரும் தத்துவப் பிரிவுகளுக்கு எமது ஆச்சிரமங்களிலும், கல்விநிலையங்களிலும் இடமுண்டு எனவும், கர்மயோகம், தர்மசாஸ்திரம் போன்ற கருத்துக்களுக்கு காலத்துக்கேற்ற புதிய விளக்கங்கள் அளிக்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. பழனிவேல்ராஜன் தமிழ் நாட்டில் நிலவும் சமய சமரசத்தைச் சுட்டிக்காட்டி, வேளாங்கண்ணி நாகூர்தர்கா, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களை இதற்கு உதாரணமாகக் காட்டினார்.

இந்திய மெய்யியல் மிக வளமுடையது என்று கூறிய மதுரை பேராயர் ஆரோக்கியசாமி, மெய்யியலுக்கும் இறையியலுக்குமுள்ள வேறுபாட்டை உணர்த்தினார்.

# ஆயருக்கு ''பொற்சின்னம்'' விருது

— யூக்கன் செய்தி

திருச்சூர் ஆயர் ஜோசவ் குண்டுகுளம் சமூகப் பணிக்காக சர்வதேச விருதொன்றைப் பெற்றுள்ளார். இந்த விருது ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஹேர்மன் மீனர் ஸ்தாபனமும், SOS குழந்தைகள் கிராம நிறுவனமும் ஏற்படுத்தியதாகும்.

கேரளத்திலுள்ள திருச்சூரில் நடந்த வைபவமொன்றில் SOSCU நிறுவனத்தின் தலைவரான திரு ஹெல்மத் குட்டின் ஆயருக்கு இந்த பொற்சின்ன விருதை அளித்தார்.

73 வயதான ஆயர் குண்டுகுளம் 10 ஏக்கர் நிலத்தை குழந்தைகள் கிராமத்துக்காக நன்கொடையாக அளித்திருந்தார். இந்தியாவில் 27 இத்தகைய கிராமங்கள் உள்ளன ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு ''தாயும்'' 15 பிள்ளைகளும் கொண்ட சில ''குடும்பங்கள்'' இருந்துவருகின்றன.

# பெண் குழந்தைகளுக்கெதிரான கொடுமைகள்

(சார் செய்தி)

''எமது சமுதாயத்தின் மனப்பான்மை மாறினால் தான், நம் நாட்டில் பெண்களின் நிலை உயர முடியும்''

தமிழ் நாட்டிலுள்ள உசிலம்பட்டி என்னுமிடத்தில் தையல் பாடசாலையொன்றை திறந்துவைத்த போது சமூக நல அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் . மேற்கண்டவாறு கூறினார்.

பெண்கள் தமது ஆண்மக்களுக்கு வரதட்சிணை கேட்பதில்லையென வாக்குறுதியளிக்குமாறு கேட்ட அவர் ''பெண் குழந்தைகள் கொலை செய்யப்படும் வழக்கத்தை தமிழக அரசு உணர்ந்து இதற்கொரு முடிவுகட்ட சகல முயற்சிகளும் செய்கிறது'' எனக் கூறினார்.

பல தொண்டர் ஸ்தாபனங்களும், மனிதாபிமானிகளும் பெண் குழந்தைகளின் நலனுக்காக ஒத்துழைக்க வேண்டுமென திருமதி. அன்பு பிரியவதனா கூறினார்.

திருமதி. சந்திரா தணிகாசலம் பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் சமூக அநீதிகள் பற்றிப் பேசினார்.

பல தாய்மார் தமது பெண் குழந்தைகளைக் கொல்கின்றனர் என்ற செய்தியினால் உசிலம் பட்டியின் பெயர் செய்தியில் அடிபடலாயிற்று. கடும் வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும், வரதட்சிணைக் கொடுமையும், சமூகத்தில் பெண்களின் தாழ்ந்த நிலையுமே இக்கொலைகள் நிகழக் காரணமாயிற்று.

# தாகூர் பிறப்பின் 130 வது ஆண்டு

கவியரசர் தாகூரின் 130 ஆவது பிறப்பு விழா மே. 9 ஆம் திகதி கொண்டாடப்பட்டுள்ளது. 1913 ஆம் ஆண்டில் கீதாஞ்சலி என்னும் தமது கவிதைத் தொகுதிக்கு நோபல் பரிசு பெற்ற இக்கவிஞர் இன்றும் கீழைத்தேய நாட்டு மக்களின் சிந்தனைக்கும், உணர்வுக்கும் உயிரூட்டி வருகின்றார் என்பது மிகையாகாது.

இந்திய தேசிய கீதமும் அவரால் உருவாக்கப்பட்டதேயாகும். அவர் இன, மத, தேசிய எல்லைகளைக் கடந்து, மனித ஆன்மா நிறைவு காண, அன்பு, பற்றின்மை, தியாகம் என்னும் வழிகளை தமது கவிதைகளிலும், ஏனைய நூல்களிலும், தமது வாழ்விலுங்கூட எடுத்துக்காட்டினார்

# விசுவாசப் பிரச்சினைகள்

இந்தோனேசியாவிலுள்ள சமரின்டா மறைமாவட்டத்தில் நிகழ்ந்த ஓர் கருத்தரங்கில் கலப்பு விவாகங்களும், கருச்சிதைவுகளும் ஓர் விசுவாசப் பிரச்சினையாக உள்ளன என ஓர் பங்குக் குரவரான பிதா பீலிக்ஸ் மடோ கூறியுள்ளார். இளம் கத்தோலிக்கருக்கு போதிய வழிகாட்டுதல் இல்லாமையே இதற்குக் காரணமென்றும், கத்தோலிக்க குடும்பங்களுக்கு ஆழமான ஆன்மீகப் பயிற்சி அளிக்கப்பட்டால் தான் அவை பிள்ளைகளுக்கு கல்வியூட்ட முடியும் என்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

**திருச்சபைச் செய்தியைத் தரும் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வாரப்பத்திரிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# பொதுநிலைத் தொண்டரால் பெண் கைதிகள் விடுவிப்பு

(யூக்கன் செய்தி)

அண்மையில் மோல்டாவைச் சேர்ந்த மரியம் புகேஜா என்னும் கத்தோலிக்க பெண் தொண்டரால் பாகிஸ்தான் சிறையிலிருந்து 10 பெண் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். 25 வயதுக்கும் 70 வயதுக்கு மிடைப்பட்ட இந்தப் பெண்களுட் பெரும்பாலானோர் சட்டவிரோதமாக எல்லையைக் கடக்க முயன்றனர் என்பதற்காக விசாரணையின்றி சிறைப்படுத்தப்பட்டவர்கள். 16 ஆண்டுகளாக மனிதப் பண்பற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்ததால் இவர்கள் தன்னம்பிக்கையும், சுயமதிப்பும் இழந்தவர்களாய் புத்தி குழம்பிய நிலையில் காணப்படுகின்றனர். கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு பெண் மனநோயாளர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பல ஆண்டுகளாக சிறைச்சாலையைத் தரிசித்துவந்த மரியம் புகேஜா அப்பெண்களின் நிலைக்காக சிறை அதிகாரிகளுடன் வாதாடத் தொடங்கினார். இறுதியாக அவர்களுள் 10 பேரை அவரது பொறுப்பில் ஒப்படைக்க சிறை அதிகாரி சம்மதித்தார். தாம் சிறையிலிருந்து விடுபட்டதை உணரவே அவர்களுக்கு இரு வாரங்கள் எடுத்தன. அவர்கள் பல்வேறு பாஷைகளைப் பேசுவதாலும், தம்மை மறந்த நிலையில் இருப்பதாலும் அவர்களைத் தத்தம் ஊருக்குத் திருப்பி அனுப்புவது தற்போதைக்கு இயலாதிருக்கின்றது.

அவர்களை சுயநிலைக்குக் கொண்டு வருவதற்கு பல முயற்சிகள்எடுக்கப்படுகின்றன.

இது போன்ற இன்னும் பல கைதிகளை மரியம் புகேஜாவிடம் ஒப்படைக்க சிறை அதிகாரிகள் தயாராயிருக்கின்றனர்

# வளைகுடாவில் மதங்களுக்கிடையே அமைதி

வத்திக்கானில் திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் வளைகுடா நாட்டு திருச்சபைகளின் பிதாப்பிதாக்களுக்காக மார்ச் 4, 5திகதிகளில் கூட்டிய கூட்டத்தில் கத்தோலிக்க கிரேக்க மதகுருமாரும் மற்றும் கல்வியன் திருச்சபை பிதாப்பிதாக்களும் பிரான்ஸ் பேராயருடன் கலந்துகொண்டனர். கூட்டத்தில் வளைகுடா நெருக்கடியில் மத்திய கிழக்கு திருச்சபை நிலை பற்றி ஆராய்ந்து வளைகுடா போரினால் கிறிஸ்தவ, முஸ்லிம் மற்றும், இந்து சமயத்தவர் இடையே ஏற்பட்ட விளைவுகள் வளைகுடாப் பகுதியில் அமைதியைஏற்படுத்த கத்தோலிக்க திருச்சபையின் பங்கு என்பவை விரைவாக விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்டவர் இடையே கருத்துப் பரிமாற்றம் திருப்திகரமான முறையில் நடந்ததாக வத்திக்கான் அறிவிப்பாளர் ருவாருவான் தெரிவித்தார்.

இதற்கு இடையில் சர்வதேச முஸ்லிம் பேரவையின் கிமீத் அல்பாறீ வளைகுடாப் பகுதியிலும் உலகம் முழுவதிலுமே அமைதியை ஏற்படுத்தும் நோக்குடன் முஸ்லீம் நாடுகளும், முஸ்லீம் மக்களும் திருச்சபைகளுடன் கலந்துரையாடல் நடக்க எந்தநேரமும் தயாராக இருப்பதாக திருத்தந்தை இரண்டாம் அருள்சின்னப்பருக்கு அனுப்பிய செய்தியை திருத்தந்தை இந்த சிறப்புக் கூட்டத்தில் வாசித்துக் காட்டினார்.

# புனிதர் பட்டம் பெற்ற பொன்விழா

நல்லாயன் சபையின் ஸ்தாபகரான மேரி யூபிரேசியா பெலற்றியர் புனிதர் பட்டம் பெற்ற பொன் விழா 2–ஆம் திகதி கொண்டாடப்பட்டது. புனித யூபிரேசியா 1796–இல் பிரான்ஸ் நாட்டில் பிறந்து 1814 இல் அன்புக் கன்னியர் சபையில் சேர்ந்து துறவியானார். ஒழுக்க, ஆன்மீக இடர்ப்பாடுகளில்சிக்கிய இளம் பெண்களுக்கு உதவும் பொருட்டு அவர் ஆயர்களின் ஆலோசனையுடன் நல்லாயன் சபையை நிறுவினார். அவருடைய வாழ்நாளிலேயே உலகெங்கும் மடங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றில் 2800 கன்னியர் பணிபுரிந்தனர். இளம் பெண்களுக்கு மட்டுமல்லாது சிறுமியர், அனாதையர், அடிமைகள், கைதிகள், கொள்ளை நோயால் பீடிக்கப்பட்டவர்கள் பலருக்கும் இவர்கள் பணிபுரிந்தனர்,

# அகதிகளுக்கு உதவி

தென்னாபிரிக்க கத்தோலிக்க திருச்சபை வெளிநாடுகளில் இருந்து தென் ஆபிரிக்கா திரும்புகின்ற ஆயிரக்கணக்கான தென் ஆபிரிக்க அரசியல் அகதிகளுக்கு உதவும் பணியில் பெரிதும் ஈடுபட்டுள்ளது. தாயகம் திரும்பும் அகதிகளுக்கு உணவு, இருப்பிடம் மற்றும் வேலை வசதிகளைதிருச்சபைப் பணியாளர்கள் பெரிதும் உதவுவார்கள் எனக் கூறப்படுகிறது.

## மன். ஆயர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வோதைய இராணுவ சோதனை முகாம் பொறுப்பதிகாரி ஆயரைத் தாக்கி, தகாத வார்த்தைகளால் நிந்தித்துள்ளார்.

இச்செயலைக் கண்டித்து யாழ்.மறைவட்டக் குருக்களும் ஆயரும் இணைந்து மன்னார் ஆயருக்குத் தமது அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளதுடன், இலங்கை ஆயர் மன்றத்துக்கும், நாட்டின் ஜனாதிபதிக்கும், ஆயர் மன்ற உபதலைவராகிய மன்னார் ஆயருக்கு நேர்ந்த செயலைப் பற்றித் தெரிவித்துள்ளனர். இம் மகஜரானது திருத்தந்தை அருள் சின்னப்பருக்கும், இலங்கையிலுள்ள அவரது தூதுவருக்கும், பிற மதத்தலைவர்களுக்கும்அனுப்பப்பட்டுள்ளது.

யாழ் மறைவட்ட பொது நிலையினர் கழகம், ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்பிய மகஜரில், ''நிராயுத பாணியான ஒருவர் தாக்கப்பட்டுள்ளது அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும்'' என கண்டித்துள்ளது.

## இந்தியாவி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாளுக்கு 2000 பேர் வரை வந்தனர். தற்போது அது 200 ஆகக் குறைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

அகதிகளை ஏற்று அவர்களை வழிநடத்தும் பணியை அவர் வை. எம். சி. ஏ யுடன் சேர்ந்து செய்துவருகிறார். ''அவர்களது பிரச்சினையை ஒரு கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் அணுகிவருகின்றோம். அரசு அவர்களுக்கு அளிக்கும் உதவி போதாது ''எனக் கூறிய அவர் மிகுந்த துன்பப்பட்டு கடல்கடந்து வரும் அவர்களை கடத்தல்காரர்கள் வஞ்சித்து அவர்களிடமுள்ள பொருள்களை அற்பவிலைக்கு வாங்க முயல்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

# 'மக்கள் சக்தி'யின் அற்புதம் வீணடிக்கப்படுகிறது

அரசு சமூகச் சீர்திருத்தத்தை முன்னெடுக்கத் தவறியதால் கிளர்ந்தெழுந்த மக்கள் சக்தியின் புதுமை குறைந்துவிடவில்லை என மணிலா துணை ஆயர் தியடோரோ பக்கானி கூறியுள்ளார்.

மார்க்கோஸ் ஆட்சி இரத்தம் சிந்தாத புரட்சியின் மூலம் மக்கள் சக்தியால் கவிழ்க்கப்பட்டதன் ஐந்தாவது ஆண்டு நிறைவை யொட்டியே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி கொரசன் அக்வீனோ ஜனநாயகத்தை நிலைநாட்டி நேர்மையுடன் நடந்தாலும் நாட்டில் சுயநலமும் ஊழலும் மிகுந்து அமைதியும் ஒழுங்கும் குறைந்துள்ளதால் அரசு தோல்வியடைந்து விட்டது என அவர் மேலும் கூறினார்.

அக்வீனோ அரசில் 1985 முதல் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வந்தாலும் 1990–ல் ஓர் வீழ்ச்சி ஏற்பட்டது, அரசியல் சச்சரவுகள், அரசின் குறைபாடான கொள்கைகள், ஸ்திரமற்ற அரசியல் காரணமாக முதலீடுகளில் வீழ்ச்சி, இயற்கை அனர்த்தங்கள் முதலியனவும் தோல்விக்குக் காரணங்களென ஆயர் பக்கானி கூறியுள்ளார்.

# இறை இரக்கத்தின் திருநாள்



இயேசுவே
நான் உம்மில்
நம்பிக்கை
வைக்கிறேன்

இறை இரக்கத்தின் திருநாளுக்கு ஆயத்தமாக பெரிய வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் நவநாள் உயிர்த்த ஞாயிறுக்கு அடுத்து வரும் ஞாயிறு (7–4-91) திருநாள் நடைபெறும். திருநாள் பலிப்பூசைகள் யாழ் மரியன்னை பேராலயத்தில் காலை 6–30 மணி, 7–30 மணி, பி. ப. 5–30 மணிக்கும், மற்றும் பல தேவாலயங்களிலும் நடைபெறும். திருநாளுக்கு யாவரும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நன்மை பெற்றுக் கொள்ளல் வேண்டும். யாழ். மரியன்னை பேராலயத்தில் பலிப் பூசைகளில் பங்குபற்றி எங்கள் நாட்டுக்கு நிரந்தர சமாதானமும், நிம்மதியான வாழ்வும் விரைவில் கிடைத்திட வேண்டுமென யாவரும் ஒரே மனதாய் வேண்டிட அழைக்கப்படுகின்றீர்கள். காணிக்கைப் பவனியும் திருப்பலி வேளையில் இடம் பெறும்:

392, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

## விசுவாசத்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கமைய திருவுடைகளும், திருச்சடங்குகளும் அமைக்கப்படவேண்டுமெனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. வழிபாட்டுத்தலங்கள், அவற்றின் சிற்பம் அலங்காரம் முதலியன இந்திய பாணியில் அமையவேண்டுமென்றும், குருக்கள் இந்திய வாழ்க்கை முறையையே கடைப்பிடிக்க வேண்டுமெனவும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

## இறைவார்த்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னோர் குருக்கள் பற்றாக் குறையினாலும், புவியியல் காரணங்களினாலும்ஒழுங்காக திருப்பலியிற் பங்குபற்ற முடிவதில்லை எனவும், திருவார்த்தை வழிபாட்டை மட்டுமே நடத்தும் கத்தோலிக்கர்கள் தமது ஆன்மீக வாழ்வை உறுதிப்படுத்த திருவார்த்தையே வழியாயிருக்கிறது எனவும் கூறினார்.

## ஜப்பானி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முனைந்த 40 மாணவர் பொலிசார் அண்மையிலுள்ள ஒரு பூங்காவுக்குக் கலைத்து விட்டனர். அங்கும் மாணவரும், பிரசைகள் குழுக்களும் ஒன்றுகூடி சமாதானப் பேரணிகளையும், இசை நிகழ்ச்சிகளையும் நடத்தினர்.

## இராணுவ...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்துள்ளது.

தவக்காலத்திட்டத்தில், யாழ்ப்பாணம், மன்னார் தவிர்ந்த ஏனைய மறைமாவட்டங்களிலிருந்து 25 தொண்டர்கள் கொழும்பில் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்கள் பங்குகளில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

வடக்கிலுள்ள இரு மறைமாவட்டங்களிலும் குருக்களிடம் பயிற்சி பெற்ற தொண்டர்கள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவர் என அறியப்படுகிறது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கசதோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்